மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். பழனிசாமி.

திரு. கே.எஸ். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். என்னுடைய ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலே நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே மிகப் பெரியதொரு மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. மிக முக்கியமானதொரு transport city என்று சொல்லக்கூடிய அளவிலே, பெருந்துறை விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலும், நாமக்கல், திருச்செங்கோடு போன்ற நகரங்களுக்கு அடுத்தபடியாக lorry போக்குவரத்தும், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கக்கூடிய இயந்திரங்களும் அதிகமாக உள்ள பெருந்துறை நகருக்கு சொந்தமாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலே என்னுடைய பெருந்துறையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தமாக ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, அரசின் நிதிநிலைக்கேற்ப, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இதுகுறித்து அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் இதுபோல், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டப்படுமா என்று யாராவது கேட்டால், அதற்கும் இந்தப் பதிலே பொருந்தும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 251, திரு. க. பாரமலை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

251—

புதிய விடுதிக் கட்டடம்

***34572—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 30

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டும் பணி எப்போது தொடங்கும்?

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

252—

கால்நடை மருத்துவமனை

***41339—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, தோட்டக்குடி ஊராட்சி, மருதகுளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, தோட்டக்குடி ஊராட்சியில் உள்ள மருதகுளத்தில் 3904 கால்நடைகள் மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும், மருதகுளம் கிராமத்தில் எந்தவொரு கால்நடை கிளை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.